# பிறமொழிக் கலப்பின்றித் தமிழ்மொழி பேசுவோம்!

உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணத்தின் ‘மானுக்குப் பிணை நின்ற படலம்’ பற்றி இளநிலை மாணவர்களிடம் உரையாற்றிய ‘தமிழ் ஒளி’ விருது பெற்ற செல்வி தீன்ஷா நூஃப் பாடல்களின் நுட்பமான கருத்துக்களைத் தெளிவாக விளக்கினார். மாணவர்களின் குழப்பத்தைப் போக்கும் விதத்தில் முறையாக விளக்கம் தந்து எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தார்.

‘இளையோர் பார்வையில் இலக்கியம்’ என்ற தன்மையில் அமைந்த இந்தக் கௌரவ விரிவுரை (09.07.2019) யானை பற்றிய அரிய தகவல்களையும் மாணவர்களிடம் கொண்டு சேர்த்தது. தன்னை யானைக் காதலன் என்று அழைத்துக் கொள்ள விரும்பும் எழுத்தாளர் செகதீசன் தனது வாழ்த்துரையில் யானை என்று பொருள் தரும் நூறு சொற்கள் தமிழ்மொழியில் இருப்பதாகச் சொல்லி மொழியின் பெருமையை விளக்கினார்.

முதலாமாண்டு இளநிலை சமூகப்பணி மாணவர் ஹ. யதீந்தர் நிகழ்ச்சியில் தானாக முன்வந்து கவிதை சொல்லியும் பாடல் பாடியும் தன் திறமையை வெளிப்படுத்தினார். பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழ்மொழியைக் கையாண்டால் மொழி சிறக்க உதவும் என்று நிகழ்ச்சியில் பேசியவர்கள் கருத்து தெரிவித்த போது அரங்கம் அதிர மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.